CC. 11/2024

ம.சா.1 இராமசாமி

26.06.2025

<u>மனு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை:</u>

1) இந்த வழக்கில் நான் புகார்தாரரா என்றால் இல்லை என் அப்பா புகார்தாரர். மீனாட்சி பஜாஜ் ஷோரூமின் உரிமையாளர் எனது தந்தை என்றால் சரிதான். இந்த வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு என் தந்தைதான் எனக்கு அதிகார பத்திரம் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். நான் எனது தந்தை நடத்தி வரும் மீனாட்சி பஜாஜ் ஷோரூமின் பங்குதாரரா என்று சொன்னால் இல்லை. எதிரியை எந்த ஆண்டு, மேற்படி எங்கள் நிறுவனத்தில் பணியமர்த்தினோம் என்று சொன்னால் 2019ம் ஆண்டு மாதம், தேதி நினைவில்லை. மேற் படி எதிரியை எங்கள் நிறுவனத்தில் பணியமத்தியதற்கு ஏதேனும் ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி கடந்த 2020 முதல் 2023 வரை எனது நிறுவனத்தில் ரூ. 28 லட்சத்து 57 ஆயிரத்து 48 பைசா தொகையினை கையாடல் செய்ததாக காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் புகார் அளித்தேன். புகார் அளிக்கும்போது ரூ. 27 லட்சம் மட்டுமே கணக்கிடப்பட்டது. பின்பு ஆவணங்களை சரிபார்த்த போது மேற்கொண்டு ரூ. 1 லட்சத்து 50 ஆயிரம் கையாடல் செய்தது தெரியவந்தது.

2) எதிரி கையாடல் செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காரைக்குடி, திருபத்தூர், சிவகங்கை, மானாமதுரை ஆகிய இடங்களில் உள்ள எங்களது கிளைகளில் எதிரியை மண்டல மேலாளராக நியமனம்

செய்ததற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 20.05.2023 அன்று காரைக்குடி வடக்கு நிலையத்தில் புகார் அளிக்கும்போது எதிரி கையாடால் செய்ததற்கு ஆவணம் எதுவும் காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி எங்கள் நிறுவனத்தில் சாதாரன இருசக்கர வாகன விற்பனையாளராக காரைக்குடி கிளையில் மட்டும் பணிபுரிந்து வந்தார் என்றால் சரியல்ல. அவர் எங்கள் நிறுவனத்தின் அனைத்து கிளைகளுக்கும் முழு பொறுப்பு. கையாடல் சம்பந்தமாக சிவகங்கை குற்றப்பிரிவில் புகார் அளித்தேனா என்றால் அளித்துள்ளேன். மேற்படி புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை.

3) உண்மையில் எதிரி கையாடல் செய்திருந்தால் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்திருப்பார்கள், அவ்வாறு எதுவும் பதிவு செய்யாததால் எனது குற்றச்சாட்டுகள் பொய் என்று சொன்னால் சரியல்ல. எனது செல்வாக்கை பயன்படுத்தி காவல் துறையின் மூலம் மிரட்டி எதிரியிடம் இருந்து காசோலைகளை பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் தாய் மற்றும் மனைவியை மிரட்டி அவர்களிடம் இருந்து ரூ. 1 லட்சம் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எங்கள் நிறுவனத்தில் ரூ. 28 லட்சத்து 57 ஆயிரத்து 40 பைசா கையாடல் செய்துள்ளார் என்று சொல்வது உண்மைக்கு புறம்பான செய்தி என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி எதிரியை காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் வைத்து மிரட்டிதான் காசோலை புத்தகம் முழுவதையும் நான் வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4) நான் எதிரியின் மீது இந்நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் 1, எனது தந்தை அதிகார முகவராக 3 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன்.

நான் எதிரியின் மீது காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தபோது எனக்கு ஆதராவாக எந்த ஆவணமும் இல்லை என்பதால்தான் அவர் மீது எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. CSR கொடுத்தார்கள். நான் வழக்கு காசோலைகளை காவல் நிலையத்தில் வைத்து காவலர்களுடைய நிர்பந்தத்தின் மூலம் எதிரியின் கையொப்பம் பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்துளேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் ஏற்பட்ட கணக்கு குளறுபடிகளில் இருந்து தப்பிக்க எதிரியின் மீது வீண் பழி சுமத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

5) எதிரியின் சரியான முகவரி தெரிந்தும் வழக்கறிஞர் அறிவிப்பை அவரது தவறான முகவரிக்கு அனுப்பி வழக்கு தாக்கல் செய்துளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனது நிறுவன ஊழியர்கள் எதிரியை அணுகி அவர் தரவேண்டிய பணத்திற்கு ஒரு ஆவணம் எழுதி வாங்கி வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக எதிரியின் மீது ஒரு மாதத்திற்கு முன்பு வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் என் தந்தை அளித்தார். 18.06.2024 ல் எதிரியின் மீது காவல் நிலையத்தில் புகார் செய்து அவரை காவல் துறை கைது செய்ததாக தினத்தந்தி நாளிதழில் 18.06.2024 அன்று ஒரு போலியான செய்தி வெளியிடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

6) எதிரியை வேண்டுமென்றே கலங்கப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் மேற்படி செய்தி வெளியிடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை, அதற்கான எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்று சொன்னால்

சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லைஎன்றால் சரியல்ல

**( இந்த குறுக்கு விசாரணையை எதிரி தரப்பு கோரிக்கையை ஏற்று CC No. 152/2023, CC No. 22/2024, CC No.51/2024 ஆகிய வழக்குகளுக்கும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.25 17:19:37 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)